1994 நவம்பர் 4]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

வங்கிக் கிளைகள் தொடங்குவதற்கான உரிமம் வழங்குவது இந்திய ரிசர்வ் வங்கிக் கொள்கையின்படி செயல்பட்டு வருகிறது. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள், ஊரகப்பகுதிகளில் கிளைகளைத் திறப்பது குறித்து ஆய்வு செய்ய மாவட்டந்தோறும் செயல்பட்டு வரும் மாவட்ட ஆலோசனைக்குழு (District Consultative committee) மேற்கொண்டு வருகிறது. இதன்படி மாவட்ட ஆலோசனைக்குழு தங்கள் தங்கள் மாவட்டங்களில் வங்கி வசதியில்லாத கிராமங்களை கண்டறிந்து பரிந்துரை செய்த இடங்களை அரசின் பரிசீலனைக்குப்பின் உரிமம் வழங்கக்கோரி மத்திய ரிசர்வ் வங்கிக்கு அனுப்பப்பட்டு வருகிறது. தேவையான ஆய்வுக்குப்பின் மத்திய ரிசர்வ் வங்கி புதிய வங்கிக் கிளைகள் திறக்க உரிமம் வழங்கி வருகிறது. திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டத்தில் உள்ள கல்லங்குறிச்சியில் வணிக வங்கி விரிவாக்கத் திட்டம் 1985-90-ம் ஆண்டுக்கான திட்டத்தில் புதிய வங்கிகளை திறப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவில் இடம்பெறவில்லை.

16—

தக்கோலம் அரசு மேல்நிலைப்பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்டுதல்.

***26684—திருமதி இலதா பிரியகுமார்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், அரக்கோணம் வட்டம், தக்கோலம் அரசு மேல்நிலைப்பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : 1994-95-ம் நிதியாண்டில் அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டவும் மற்றும் நில ஆர்ஜிதம் செய்வதற்காகவும் ரூ. 75/- இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளியின் பெற்றோர்—ஆசிரியர் கழகம் கட்டிட மதிப்பீட்டில் 50% தொகை

செலுத்த முன் வந்தால் அரசின் பங்காக 50% தொகை வழங்கப்பட்டு தக்கோலம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைக் கட்டிடங்கள் கட்டித் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

முற்பகல் 11-15

2. தம் கட்சியைச் சேர்ந்த ஆறு உறுப்பினர்களை "எக்கட்சியையும் சாராத உறுப்பினர்கள்" என அறிவிக்க வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் விடுத்த கோரிக்கை.

***திரு எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே எங்கள் கட்சியிலேயிருந்து நீக்கப்பட்ட ஆறு உறுபபினர்களை எக்கட்சியும் சாராதவர்கள் என அறிவித்து அவர்களுக்கு தனி இருக்கைகள் ஒதுக்கவேண்டுமென்று கடந்த செப்டம்பர் மாதம் 1-ஆம் தேதி உங்களுக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன். அதற்கு முன்பாகவே அவர்கள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவினால் ஆறு ஆண்டுக்காலத்திற்கு பிரதம உறுப்பினர் பொறுப்பிலேயிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே அவர்களை எக்கட்சியும் சாராதவர்களாக அறிவிக்கவேண்டுமென்று நான் தங்களைக் கேட்டுக்கொண்டிருந்தேன். பிறகு பேரவைச் செயலாளரிடத்திலேயிருந்து 16-ஆம் தேதி எனக்கு ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதத்திலே இந்தக் கோரிக்கை பரிசீலனையில் இருப்பதாகவும், என்றாலும் கட்சியிலே ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு யார் பொறுப்பானவர்களோ அவர்கள்தான் பேரவைத் தலைவருக்கு இதுகுறித்து எழுதுவது மரபாகவும்